**Transnational Government of Tamil Eelam**

**நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

**26-03-2011**

மதிப்பிற்குரிய,
திரு [redacted]

அவர்கட்கு!

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் அரசாங்கத்தின் அரசமைப்பை ஏற்றுக் கொண்டு உறுதிமொழி இதுவரை எடுக்காத காரணத்தால் உறுப்பினர் என்ற தகைமை நிலையை இழந்துள்ளீர்கள் என்பதனை இத்தால் அறியத் தருகிறேன்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசமைப்பை ஏற்றுக் கொண்டு உறுதிமொழி எடுக்குமாறு 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 முதல் பல கோரிக்கைகள் தங்களுக்கு விடுக்கப்பட்டன. இக் கோரிக்கைளை ஏற்றுத் தாங்கள் உறுதிமொழி எடுக்காத காரணத்தால் மீண்டும் 2011 மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்குள் உறுதிமொழி எடுக்குமாறும், இவ்வாறு எடுக்கத் தவறும் பட்சத்தில் நீங்களாகவே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் என்ற தகைமைநிலையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்கிறீர்கள் எனக் கொள்ளப்படும் எனவும் தங்களுக்கு 24/02/2011அன்று அறியத் தந்திருந்தேன்.
உறுதிமொழி எடுப்பதற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு என்னிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மார்ச் மாதம் 25 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டு அதுவே கால எல்லையின் இறுதியாகவும் கொள்ளப்பட்டது.

வழங்கப்பட்ட இறுதிக் கால எல்லையான மார்ச் 25 ஆம் திகதி தாண்டிய பின்னரும் உங்கள் உறுதி மொழி என்னை வந்தடையவில்லை. இதனால் ஏற்கெனவே அறிவிக்கப் பட்டவாறு நீங்களாகவே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் என்ற தகைமைநிலையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்கிறீர்கள் எனும் அடிப்படையில் நாம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

தங்கள் முடிவால் தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் ஏற்பட்டிருக்கும் உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விபரங்கள் தேர்தல் ஆணையகத்திற்கு மார்ச் மாதம் 27ம் நாள் அனுப்பி வைக்கப்படும் என்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

--

இப்படிக்கு

பொன். பாலராஜன்
அவைத்தலைவர் நா.க. த. அ

26/03/2011